# சூரியவெவ பிரதேச சபை

# ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 26 திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ் அறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சூரியவெவ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயத்தினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கணக்குப் பதிவு நடவடிக்கைகளுக்காக பதியப்பட்டிருந்த நாட்குறிப்புக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை இனங்காணக் கூடிய விதிமாக போதியளவான தகவல்கள் மற்றும் தொடர்பு விரங்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. அத்துடன் கணக்குகளிலும் சரியான முறையில் பிரதி செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 219,425 இற்கான நிலையான சொத்துக்களின் பெறுமதியினை குறிப்பிட்ட சொத்துக்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மூலதனத்திற்கான வருமான பங்களிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது, நிலுவை அனுமதிப்பத்திரம் மற்றும் வீத வரியிலிருந்து அறவிடப்பட முடியாது என கணித்து பதிவழிக்கப்பட்ட ரூபா 226,890 தொகை பிரதான பேரேட்டின் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டண கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் மீதி ரூபா 453,780 தொகையினால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது நுகர்வுப் பொருட்களின் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 10,489 வருமானச் செலவு மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) வைப்புக் கணக்குகளின் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) பலவின வைப்புக் கணக்கில் ஆரம்ப செலவு மீதியாகிய ரூபா 488,631 தொகையினை அக் கணக்கின் வரவு பக்கத்தில் பதியப்பட்டமையால் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலவின வைப்புக் கணக்கின் மீதி அத் தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) நாட்குறிப்பு 10 இன் பிரகாரம் வருமான வைப்புக் கணக்கிற்கு ரூபா 60,300 வைப்புப் செய்திருந்த போதும் பிரதான பேரேட்டின் பிரகாரம் பலவின வைப்புக் கணக்கில் அத் தொகை செலவு வைத்தமையால் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலவின வைப்புக் கணக்கின் மீதி அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(iii) பிரதான பேரேட்டில் பேணப்பட்டிருந்த அனுமதிப்பத்திரக் கட்டண கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வரவு மீதி ரூபா 707,630 ஆக இருக்க வேண்டும். எனினும் ஐந்தொகையில் அவை ரூபா 253,850 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் வித்தியாசம் ரூபா 453,780 ஆகும்.

(iv) நாட்குறிப்பு 13 இன் பிரகாரம் பாதுகாப்பு பிணை வைப்புக் கணக்கின் வித்தியாசமாகிய ரூபா 108,750 தொகையினை திரண்ட நிதியம் மற்றும் பற்றாக் குறைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு பாதுகாப்பு பிணை வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதும், பிரதான பேரேட்டின் பிரகாரம் அத் தொகை இரண்டு கணக்குகளிலும் வரவுப் பகுதியில் பதிவு செய்யபட்டிருந்தது.

(v) மீளாய்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் கேள்வி வைப்பு என எட்டு பற்றுச் சீட்டுக்களின் மூலம் கிடைத்திருந்த ரூபா 40,000 தொகை அக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது 04 கணக்கு விடயங்களின் கீழ் பிரதான பேரேடு மற்றும் நிதிக் கூற்றுக்களிடையே ரூபா 2,979,690 தொகைக்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்காக உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன்தொகைக்காக ரூபா 18,470 வட்டி செலுத்தியிருந்த போதும் அத் தொகை வருமானம் மற்றும் செலவுக் கணக்கில் வட்டி செலுத்துதல் பங்கிலாபம் மற்றும் பணிக் கொடைத் தொகையாகிய ரூபா 66,401 தொகையில் அடங்கியுள்ளது.

(ஏ) நிலையான வைப்புக்காக 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீதியை உறுதிப்படுத்தும் சான்றிதழின் பிரகாரம் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 2,793,050 தொகை எனினும் ஐந்தொகையில் அத் தொகை ரூபா 793,050 தொகையினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(ஒ) வீதி விளக்குகள் பராமரிப்பு விடயங்களுக்காக இலங்கை மின்சார சபையிலிருந்து 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 78,304 எனினும் அதனை ஐந்தொகையில் ரூபா 200,000 தொகை என ரூபா 121,696 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) சூரியவெவ வாராந்த சந்தையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கடைகளை பெற்றிருந்த உரிமையாளர்கள் கடைகளுக்காக 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒரே முறையில் செலுத்தும் பணத்தை பிரதேச சபைக்கு முழுவதும் செலுத்தியிருந்த போதும், அந்த ரூபா

296,314 தொகையினை குறிப்பிட்ட கணக்குகளுக்கு சீராகச் செய்யப்படாமல் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலவின வைப்புக்கள் கணக்கின் மீதியில் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படா கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

4 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,963,533 தொகையாக காணப்பட்டதுடன், துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,980,211 ஆகும். வித்தியாசம் ரூபா 16,678 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்காக சான்றுகள் இன்மை

---

(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

---

2010 திசெம்பர் 31 திகதி வரை 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பிருக்கவில்லை. அத்துடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,210,416 தொகையாகும். பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்களின் காலப்பகுப்பாய்வு பின்வருமாறு ஆகும்.

| | கணக்காய்வு ஐய வினாக்கள் |
|---|---|
| 03 மாதங்கள் முதல் 01 வருடம் வரை | 02 |
| 01 வருடம் முதல் 02 வருடங்கள் வரை | 02 |

(ஆ) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை

---

(i) தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 4,201,658 இற்கான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது பிரதான பேரேட்டின் பிரகாரம் நாட்குறிப்புக்களின் மூலம் 07 கணக்கு விடயங்களின் மூலம் திரண்ட நிதி மற்றும் பற்றாக்குறை கணக்கிற்கு ரூபா 2,413,617 தொகையொன்று வரவு வைக்கப்பட்டிருந்த போதும் அந்த சீராக்கல்களில் இனங்காணக் கூடிய விதமாக குறிப்பிட்ட தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாண ஏற்பாடுகளுக்கு மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் இணக்கமின்மைகள்

| | | |
|---|---|---|
| | மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | -------------------------------- |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் | |
| (i) | பிரிவு 47(i) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கட்டிட அனுமதிப் பத்திர வழங்கும் விடயங்கள் முறைப்படி மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | பிரிவு 126(vii) | விளம்பரப் பலகைகளை பயன்படுத்துவதற்காக கட்டணம் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை விதி (நிதி மற்றும் நிருவாக) | |
| | விதி 126 | ஒவ்வொரு செலவு அங்கீகாரம் மீதான செலவுகள் மீது கவனத்துடன் இருக்கக் கூடிய விதமாக வாக்குப் பண பேரேட்டில் மிகக் கவனத்துடன் விபரங்களுடன் எழுதப்பட வேண்டும். எனினும் சபையினால் வாக்குப் பண பேரேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | தென் மாகாண நிதிப் பிரமாணம் | |
| (i) | நிதி விதி 42.1 | ரூபா 100,000யினை மிகைக்கும் திருத்த வேலைகளுக்காக உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தை பெற வேண்டும். எனினும் அவ்வாறு அங்கீகாரத்தை பெறாமல் சபையினால் இலக்கம் எல்ஈ-7476 கொண்ட கப் வண்டியின் திருத்த வேலைகளுக்காக 2010 மார்ச் 19 திகதி ரூபா 178,504 தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 181.2 | கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து உறுதிச் சான்றுகளிலும் அவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களிலும் "கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது" என்ற முத்திரை பதியப்பட வேண்டும். எனினும் சில கொடுப்பனவு உறுதிச் சான்றுகளில் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற முத்திரை பதியப்படாமல் ஒரு உறுதிச் சான்றிற்காக பலமுறை கொடுப்பனவு செய்யும் வாய்ப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. |
| (ஈ) | இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) | நி.பி. 189 | சபைக்குக் கிடைத்திருந்த மதிப்பிளந்த இலக்கம் 073599 கொண்ட ரூபா 32,636 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 1645 மற்றும் 1646 | வாகனங்களின் மாதாந்த செயலாற்றுகை பொழிப்புடன் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது 10 வாகனங்களின் மாதாந்த பொழிப்புடன் ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 337,618 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 447,002 ஆகக் காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா000’ | ரூபா 000’ |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 254 | 743 | 254 | 380 | 134 | 1,223 |
| எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் | 1,700 | 873 | 827 | 291 | 291 | - |
| ஏனைய வருமானங்கள் | 357 | 157 | 200 | - | - | - |

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 827,000 தொகையான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.3 நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

1981 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் முறைப்படி அறவிடப்படாமையால் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 253,850 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.4 நிலுவை கடை வாடகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 159 இன் பிரகாரம் நிலுவை வாடகை அறவிடப்படாமையால் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 230,450 தொகை கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.5 விளம்பரப் பலகைக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126(vii) ஊ பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விளம்பரப் பலகை பயன்படுத்துவதற்காக கட்டணங்கள் அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ |
| ஆளுக்குரிய வேதனம் | 9,662 | 10,594 | (932) | 8,881 | 10,135 | (1,254) |
| ஏனையவை | 9,578 | 6,331 | 3,247 | 7,846 | 5,778 | 2,068 |
| உப கூட்டுத் தொகை | 19,240 | 16,925 | 2,315 | 16,727 | 15,913 | 814 |
| மூலதன செலவுகள் | 49,350 | 8,053 | 41,297 | 58,900 | 15,499 | 43,401 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 68,590 | 24,978 | 43,612 | 75,627 | 31,412 | 44,215 |

2.4 மனித வள முகாமைத்துவம்

2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவியணியினர் | 01 | 01 |
| இரண்டாம் தரம் | 06 | 09 |
| ஆரம்ப தரம் | 13 | 16 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | 19 | 19 |

2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

2.5.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,509,738 ஆகும்.

2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,599,933 ஆகும்.

(ஆ) இடமாற்றம் பெற்று சென்றுள்ள மூன்று அலுவலர்களிடம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 175,374 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. அந்த பதவியணிக் கடன் மீதியினை ஒரே முறையில் அறவிடப்பட வேண்டும். எனினும் தவணைகளாக அறவிடப்பட்டிருந்தன.

2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தென் மாகாண சபை நிதி விதி கோவையின் விதி 42.1 இன் பிரகாரம் ரூபா 100,000 இனை விஞ்ஞிய திருத்த வேலைகளுக்காக உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் அங்கீகாகரத்தைப் பெற வேண்டும். எனினும் அவ்வாறு அங்கீகாரத்தை பெறாமல் சபையினால் இலக்க எல் டீ 7476 கொண்ட கப் வண்டியின் திருத்த வேலைக்காக 2010 மார்ச் 19 திகதி ரூபா 178,504 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

2.7 செயற்பாட்டுத் திறமையின்மை

1988 இன் 74 இலக்கம் அதிகார சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளியிடும் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் அது தொடர்பான 1994 பெப்ரவரி 18 திகதிய இலக்கம் 04/1994 கொண்ட நிதி அமைச்சின் சுற்று நிருபத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று அங்கத்தவர்களிடம் பெற வேண்டும் எனினும் சபையின் தலைவர் உட்பட 05 அங்கத்தவர்களில் ஒருவரேனும் 2011 மார்ச் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்காக அக் கூற்றுக்கள் சமர்ப்பித்திருக்கவில்லை.

2.8 அகக் கணக்காய்வு

சபையின் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஈ) வாகனக் கட்டுப்பாடு